# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8064879

1. District : கடலூர் PS: ஊ.த.க. பிரிவு Year: 2020 FIR No.: 08/2020 Date: 29.10.2020
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Criminal Procedure Code Sections பிரிவுகள்: 102
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 28.10.2020 17.45 hrs Date to : 28.10.2020 21.00 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 29.10.2020 Time : 1100 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Vol - IV Time : 1100 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : கணினி தட்டச்சு
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 10 கி.மீ. மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : சார் பதிவாளர் அலுவலகம், நெல்லிக்குப்பம்.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : A. அமுதா (b) Father's/ Husband's Name : —
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : ___ Place of Issue : ___
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர்.
தொழில் முகவரி
உதவி ஆய்வுக்குழு அலுவலர்,

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**C.கலைவாணி, வயது 34, க/பெ. S.ரஜினிகாந்த், சார்பதிவாளர், நெல்லிக்குப்பம், கடலூர் மாவட்டம்**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**தாமதமில்லை.**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

இன்று 29.10.2020 ந்தேதி காலை 11.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, அ.அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு; நாள் : 29.10.2020 அனுப்புநர் அ. அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – சார் பதிவாளர் அலுவலகம், நெல்லிக்குப்பம், கடலூர் மாவட்டம் – திடீர் ஆய்வு சோதனை – உரிய சரியான முகாந்திரம் இன்றி கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் – திடீர் ஆய்வு மகஜரில் கைப்பற்றுதல் – ஒப்படைப்பு – நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

29/10/20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
29/10/2020

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29.10.2020 at 12.00 hrs.

Name: பெயர் S. MALA
Rank: நிலை Inspector No. எண் of Police
V&AC, CDD.,

சமர்ப்பித்தல் – சம்மந்தமாக, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) உதவி ஆய்வுக்குழு அலுவலரான அ.அமுதா ஆகிய நான் எனது அலுவலகத்தில் இருக்கும் போது எனக்கு கிடைத்த தகவலின் படி கடலூர் மாவட்டம், மூநெல்லிக்குப்பம் சார்பதிவக அலுவலகத்தில் நெல்லிக்குப்பத்தில் உள்ள ஆவண எழுத்தர்கள் இன்று 28.10.2020 நெல்லிக்குப்பம் சார்பதிவக அலுவலகத்தில், சார் பதிவாளர் திருமதி. கலைவாணி என்பவரை சந்தித்து ஆவணங்கள் பதிவு செய்வதற்காகவும் மற்றும் இதர பதிவுகளுக்காகவும் லஞ்சமாக பணம் கொடுக்க போவதாக கிடைக்க பெற்ற ரகசிய தகவலை பெற்று, உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மாலை சுமார் 4.00 மணிக்கு சென்று அங்கு பணியில் இருந்த ஆய்வாளர் S.மாலா அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி நெல்லிக்குப்பம் சார்பதிவகம் அலுவலகத்திற்கு மாலை சுமார் 5.30 மணிக்கு மேல் சென்றால் அங்கு ஆவண எழுத்தர்கள் நெல்லிக்குப்பம் சார்பதிவகத்தில் பத்திர பதிவிற்கு கொடுக்க உள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், ஆய்வாளர் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், ஆய்வாளர் மாலா மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மாலை 5.00 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு கிழக்கு மேற்காக செல்லும் கடலூர் – பண்ருட்டி சாலையின் வடபுறமாக நெல்லிக்குப்பம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சற்று தொலைவில் சுமார் 5.30 மணிக்கு வந்து, மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் நெல்லிக்குப்பம் சார்பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 5.45 மணிக்கு தெற்கு பார்த்து அமைந்து இருக்கும் நெல்லிக்குப்பம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். அப்போது அங்கிருந்த பொதுமக்கள் பதற்றத்துடன் சார்பதிவாளர் அலுவலகத்தைவிட்டு வெளியேற முயன்றவர்களை தடுத்து நிருத்தி விசாரித்தபோது, அவர்கள் பத்திரம் பதிவு மற்றும் திருமண பதிவு செய்வதற்காக சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார்கள். பின்னர், ஆய்வாளர் நெல்லிக்குப்பம் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பயந்து ஓடி வெளியே வந்தவர்களை, அலுவலகத்தின் முன்புறம் வராண்டாவில் உட்கார வைத்துவிட்டு, பாதுகாப்பிற்கு காவலர்களை நியமித்தார். நானும், ஆய்வாளரும் மற்றும் இதர காவல் குழுவினரும் மெயின் ஹாலில் சிமெண்ட் மேடையில் தெற்கு பார்த்து அமர்ந்திருந்த நபரிடம், அவர்தான் சார்பதிவாளர் என தெரிந்துகொண்டபின்னர், என்னையும், ஆய்வாளரையும் மற்றும் ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் அவரை பற்றி விசாரித்த போது தனது பெயர் S.கலைவாணி, வயது 34, க/பெ ரஜினிகாந்த், சார் பதிவாளர் நிலை–1, சார்பதிவாளர் அலுவலகம், நெல்லிக்குப்பம் என்றும், தான் 02.08.2018 முதல்

நெல்லிக்குப்பம் சார் பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும், தான் நெ.11, பணங்காட்டுத் தெரு, பண்ருட்டி, கடலூர் மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் நான் மேற்படி சார்பதிவாளர் நிலை–1 திருமதி S.கலைவாணி அவர்களிடம் அலுவலகத்தை ஆய்வு செய்ய போகும் விவரத்தை தெரிவித்தேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அவரது முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். மேற்படி நெல்லிக்குப்பம் சார்பதிவாளர் அலுவலகமானது சுற்றுசுவற்றுடன் கூடிய அரசு கட்டிடமாகும். இதன் பிரதான வாயிற்படி தெற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் வராண்டா சுமார் 40 x 5 அடி நீள அகலமுள்ளது. பிரதான வாயிற்படிக்கு முன்னர் கிழக்கு பக்கம் சுமார் 4 x 6 அடி அளவுள்ள பொதுமக்கள் காத்திருப்பு அறையும், மேற்கு பக்கம் உள்ள அறையில் பழைய பொருட்கள் வைக்கப்பட்டிருந்தது. பிரதான வாயிற்படியை அடுத்து அடுத்து சுமார் 20 x 16 அடி நீள அகலமுள்ள பிரதான அறை அமைக்கப்பட்டுள்ளது. அந்த அறையின் வடபுறம் ஒரு சிமெண்ட் மேடை அமைக்கப்பட்டு அதில் சார் பதிவாளர் இருக்கை தெற்கு பார்த்தவாறு இருந்தது. மேடையின் மீது மரத்தாலான மேஜையும், அதில் கணினி வைக்கப்பட்டுள்ளது. அந்த இருக்கைக்கு கிழக்கே தரையில் மற்றொரு டேபிள் சேர் வைக்கப்பட்டுள்ளது. அந்த மேஜையின்மீது கணினியின் கீபோர்டு மற்றும் கேமரா பொருத்தப்பட்டுள்ளது. மேற்படி ஹாலிற்கு கிழக்கே சுமார் 22 x 12 அடி நீல அகலம் கொண்ட கண்ணாடி கதவுகள் பொறுத்தப்பட்ட சர்வர் ரூம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி சர்வர் ரூமில் பழைய பத்திரங்கள் ஸ்கேன் பண்ணுவதற்கான உபகரனங்கள், 4 கணினிகள், 2 பிரிண்டர்கள் மற்றும் 2 ஜெராக்ஸ் மெஷின்கள் இருந்தன. மேலும், சுமார் 3 x 6 அடி அளவுள்ள இரும்பு பீரோ இருந்தது. மேலும் அதே அறையில் இரண்டு குளிர்சாதன பெட்டிகள் பொருத்தப்பட்டிருந்தது. மேற்படி ஹாலுக்கு மேற்குபுறம் சுமார் 15 x 15 அடி அளவுகொண்ட பதிவுரு வைப்பறை உள்ளது. அந்த வைப்பறையில் 3 இரும்பு பீரோக்களும், 4 மர பீரோ மற்றும் ஒரு மரத்தாலான அடுக்கு இருந்தன. அதில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. அந்த அறைக்கு இணைந்தார்போல் வடபுறம் சுமார் 15 x 15 அடி நீல அகலம் கொண்ட மற்றொரு பதிவுறு அறை இருந்தது. அதில் சுவற்றுடன் இணைந்த சிமெண்ட் சிலாப்பும், 5 இரும்பு பீரோவும் உள்ளது. அதில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. சார்பதிவாளர் இருக்கைக்கு பின்புறம் சுமார் 10 x 15 நீல அகலம் கொண்ட அறையில் கிழக்குபுறம் கழிவறை அமைக்கப்பட்டுள்ளது. அந்த அறையில் சுவற்றின் ஓரமாக 3 மர பென்ச் போடப்பட்டு ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. பின்னர் நான், ஆய்வாளர் மாலா, சார்பதிவாளர் மற்றும் காவல் குழுவினருடன் நிலை–1 கலைவாணி முன்னிலையில் அலுவலகம் முழுவதும் சோதனை செய்தபோது, 1) சார்பதிவாளர் அலுவலகத்திலுள்ள பதிவுறு அறையில் இருந்த சுமார் 6 க்கு 3 அடி மர பீரோவை சோதனை

செய்தபோது அதன் முழுவதும் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. அதன் அடி தட்டில் ஆவணங்களுக்கிடையே பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்து. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க 500 x 30, 200 x 7, 100 x 7, 50 x 12 ஆக மொத்தம் ரூ.17,700/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார் பதிவாளர் கலைவாணி அவர்களிடம் பணம் பற்றி விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். 2) பதிவுறு அறைக்கு இணைந்தால் போல் அமைந்துள்ள மற்றொரு பதிவறையில் இருந்த சிமெண்ட் சிலாப்பில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு அடியில் பணம் இருந்தது. அவற்றை எண்ணிப்பார்க்க 500 x 10, 200 x 5, 20 x 2, 10 x 3 ஆக மொத்தம் ரூ.6,070/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார் பதிவாளர் கலைவாணி அவர்களிடம் பணம் பற்றி விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். 3) சார்பதிவாளர் இருக்கைக்கு பின்புறம் இருந்த அறையில் மர பெஞ்சின் மீது அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு அடியில் பணம் இருந்தது. அவற்றை எண்ணிப்பார்க்க 500 x 14, 200 x 3, 100 x 5, 20 x 2, 10 x 2 ஆக மொத்தம் ரூ.8,160/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார் பதிவாளர் கலைவாணி அவர்களிடம் பணம் பற்றி விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். 4) சார்பதிவாளர் அமர்ந்திருந்த ஹாலின் கிழக்கு புறம் இருந்த சர்வர் ரூமில் இருந்த இரும்பு பீரோவில் ஆவணங்கள் மற்றும் ஸ்டேஷனரி பொருட்கள் இருந்தன. அந்த பீரோவில் மேல் தட்டில் ஆவணங்களுக்கு அடியில் பணம் இருந்தது. அவற்றை எண்ணிப்பார்க்க 500 x 26, 200 x 7, 100 x 9 ஆக மொத்தம் ரூ.15,300/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார் பதிவாளர் கலைவாணி அவர்களிடம் பணம் பற்றி விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். 5) சார்பதிவாளர் அமர்ந்திருந்த ஹாலின் கிழக்கு புறம் இருந்த சர்வர் ரூமில் இருந்த பிரிண்டர்க்கு அடியில் சோதனை செய்ய அதில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அவற்றை எண்ணிப்பார்க்க 500 x 20, 200 x 5, ஆக மொத்தம் ரூ.11,000/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார் பதிவாளர் கலைவாணி அவர்களிடம் பணம் பற்றி விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். மேலும், மேற்சொன்ன சோதனையில் கைப்பற்றப்பட்ட பணத்திற்கு சரியான முகாந்திரம், சார்பதிவாளர் கலைவாணி தெரிவிக்காததால் மேற்படி பணம் மொத்தம் ரூ.58,230/– பத்திரபதிவு அலுவலகத்தில் பதிவு நடவடிக்கைக்காக லஞ்சமாக பெறப்பட்டிருக்கலாம் என கருதி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி கைப்பற்றினேன். சோதனையின் போது நெல்லிக்குப்பம் சார்பதிவாளர் அலுவலகத்தில், திருமதி.A.வேல்விழி (52), க/பெ.அன்பழகன், உதவியாளர், ஸ்ரீராம் நகர், பட்டானூர், வானூர் தாலுக்கா, விழுப்புரம்

மாவட்டம், திருமதி. S.ரதிதேவி (30), க/பெ. அஷோக், இளநிலை உதவியாளர், நெ.609, வடக்குத் தெரு, கீழூர் அஞ்சல், பாச்சாரப்பாளையம், கடலூர் மாவட்டம் மற்றும் C.பாஸ்கரன் (56), த/பெ. சின்னராஜ், அலுவலக உதவியாளர், நெ.6, பகவதி அம்மன் கோயில் புதிய 1–வது தெரு, வில்வநகர், கடலூர் ஆகியோர் பணியில் இருந்தனர். மேலும், அலுவலகத்தினுள் கேமரா ஆப்பரேட்டராக பணியில் இருந்த A.புருஷோத்தமன் (27), த/பெ. அன்பழகன், அங்காளம்மன் கோயில் தெரு, குள்ளஞ்சாவடி, கடலூர் மாவட்டம், மற்றும் Data entry operator ஆக பணியில் இருந்த ஆகாஷ் (22), த/பெ. முருகன், மெயின் ரோடு, மேலபாளையூர், C.கீரனூர் போஸ்ட், விருத்தாசலம் கடலூர் மாவட்டம் ஆகியோர் பணியில் இருந்தனர். இவர்களைப் பற்றி விசாரிக்க முறையே Out sourcing அடிப்படையில் Zigma Tech Pvt. Ltd. மூலம் ஊதியம் பெற்று பணிபுரிவதாக சொன்னார்கள். மேலும் அலுவலகத்தில் S.நித்யா (37), க/பெ.சேகர், புதுநகர், காராமணிகுப்பம், கடலூர் மாவட்டம் மற்றும் S.முருகாநந்தி. க/பெ. செந்தில்குமார், நெ.81, பழைய மாதியம்மன் கோயில் தெரு, திருவதிகை, பண்ருட்டி ஆகியோர்கள் சார் பதிவாளர் அலுவலகத்தில் Old documents scanning operator ஆக பணிபுரிந்துவருவதாகவும், இவரை பற்றி விசாரிக்க இவர் Out sourcing அடிப்படையில் Nine Star Pvt. Ltd. மூலம் ஊதியம் பெற்று பணிபுரிவதாக சொன்னார்கள். அலுவலகத்தில் பணியில் இருந்த மேற்படி பணியாளர்களை சோதனை செய்தபோது, தனி நபர் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவர்களிடம் பணம் இருந்தது. ஆய்விற்கு பின் திரும்ப அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், பிரதான நுழைவாயில் அருகே இருந்த இரு நபர்களை விசாரிக்க, R.சீனுவாசன் (50), த/பெ.ராஜகோபால், நெ.9, Block, பாரத் நகர், கோண்டூர், கடலூர் என்றும் பத்திரப்பதிவு நகல் வாங்க சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அடுத்த நபரை விசாரிக்க, D.குப்புசாமி (52), த/பெ.தர்மர், டேங்க் தெரு, பெரும்பாக்கம், உளுந்தூர்பேட்டை என்றும், தான் பத்திரபதிவு எழுத்தர் பலராமன் அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிவதாகவும், தான், பத்திரப்பதிவு முடிந்துவிட்டதா என பார்க்க சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். மேலும், பத்திரப்பதிவிற்காக வந்த பொதுமக்களை விசாரித்துவிட்டு அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். மேற்சொன்ன ஆய்வின்போது கணக்கில் வராத, சார்பதிவாளரால் உரிய காரணம் தெரிவிக்காத பணம் ரூ.58,230/–, 1) வருகை பதிவேடு (பக்கம் 1 முதல் 59 வரை), 2) தனி நபர் பண இருப்பு பதிவேடு (பக்கம் 1 முதல் 21 பக்கங்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது), 3) இன்று (28.10.2020) பதிவு செய்யப்பட்ட பத்திரபதிவு மற்றும் திருமண பதிவு விவரங்கள் (பிரின்ட் எடுத்தது) (பக்கம் 1 முதல் 4 வரை) ஆகியவை மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், அலுவலகத்திலுள்ள H கணக்கு, G கணக்கு மற்றும் C கணக்கு ஆகிய பதிவேடுகளை ஆய்வு செய்தபோது அதில் குறிப்பிட்டிருந்த நிரந்தர வைப்புத்தொகை ரூ.250/– குறித்து கேட்க, சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து எடுத்து ஆஜர் செய்தார் பின்னர் அப்பணம் மற்றும் ஆவணங்கள் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக

திடீர் ஆய்வு மகஜர் மாலை 5.45 மணி முதல் இரவு 9.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் சோதனையின் போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் மற்றும் அவர்களது குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. இன்று 29.10.2020ந் தேதி காலை 11.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து, 28.10.2020ந்தேதி நெல்லிக்குப்பம் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமாக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டி, திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட அசல் திடீர் ஆய்வு மகஜர், ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.58,230/–, திடீர் ஆய்வு மகஜரில் குறிப்பிட்டுள்ள கைப்பற்றப்பட்ட ஆவணங்களை இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படுகிறது. மேலும் இது சம்மந்தமாக பதிவு செய்யும் வழக்கின் விவரம் பின்னர் தெரியப்படுத்துமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள (அ. அமுதா) உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். அய்யா, நான் இன்று 29.10.2020 பகல் 11.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/2020, சட்டபிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 மற்றும் 102 குற்றவியல் நடைமுறை சட்டம் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதன் அசலை, வாதியின் புகார் மனுவுடன் இணைத்து, கணம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

P. Valen
29/10/2020.
Inspector of police.
V&AC., CUD.